**லங்காபுர பிரதேசபிரதேச சபை - 2022**

**------------------------------------------------------**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

லங்காபுர பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் லங்காபுர பிரதேச சபையின் 2022 திசெம்பா 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்டதரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய

ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவையின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள்முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவையின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பாக கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.6.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கும் கணக்கீட்டு கொள்கை இலக்கம் 3.5 இன் கீழ் காணப்பட்ட பெறுமானத் தேய்வு விகிதங்களை விட கூடிய விகிதங்களால் நிலையான சொத்துக்கள் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்தன. | ஆரம்பத்தில் காணப்பட்ட சொத்துக்கள் குறித்த பயனுள்ள ஆயட்காலம் முழுவதும் குறைந்து செல்லும் தேய்வு முறையில் பெறுமானத் தேய்வு செய்யப்படுவதுடன் புதிதாக கொள்வனவு செய்யப்படும் சொத்துக்கள் நிதி விதிப்படி அறிமுகம் செய்யப்படும் பெறுமானத் தேய்வு விகிதத்தில் பெறுமானத் தேய்வு செய்யப்படுவதா. | ஐந்தொகை குறிப்பின் கீழ் வெளிப்படுத்தும் முறைப்படி கணக்கீடு செய்ய வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 ஆண்டில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த மீளாய்வாண்டிற்கு உரிய ரூபா 93,508 ஆன 03 செலவுகள் மீளாய்வாண்டின் செலவினத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்பதாக.. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு 04 சொத்து வகைகளின் பெறுமதி ரூபா 79,398 குறைத்தும் 02 சொத்து வகைகளின் பெறுமதி ரூபா 102,966 கூடுதலாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | மீளாய்வாண்டில் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள பெறுமதி ரூபா 1,926,936 ஆன பொது சுடுகாடொன்றின் வேலி அமைக்கும் செலவினம் நிலையான சொத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டி இக்கவில்லை. | 2021 ஆண்டில் மீண்டெழும் செலவின் கீழ் செலவினத்திற்கு எதிராக பதிவழித்துள்ளதாக. | - மேற்படி - |
| (ஈ) | நிர்மானத்தை கைவிட்டிருந்த தபால வாராந்த சந்தை கட்டிடத்தின் வேலைகளின் பெறுமதி ரூபா 1,678,127 ஆன போதும் நிலையான சொத்துக்களில் நடைமுறை வேலையின் கீழ் அப் பெறுமானம் ரூபா 3,552,328 ஆக கணக்கீடு செய்யப்படடிருந்தது. | ஜர்னல் குறிப்பு ஊடாக சரி செய்யவதாக. | - மேற்படி - |
| (உ) | தபால வாராந்த சந்தை வளவில் எஞ்சி இருந்த ரூபா 51,000 பெறுமதியான நிர்மாணப் பொருட்களின் இருப்பு ஏஞ்சிய இருப்பின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.3 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியற்கு 04 கணக்கு விடயங்களிற்குரிய நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த மீதிகள் மற்றும் அவற்றிற்குரிய பதிவேடுகள/அட்டவணைகளில் காண்பிக்கப்பட்டிருந்த கூட்டத்தொகைகளிற்கு இடையில் ரூபா 765,388 வித்தியாசம் ஆனது. | சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக. | சரியான பெறுமதியை இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |

**1.7 இணக்கமின்மைகள்**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணக்காமை சந்தர்ப்பங்கள் பின்வருமாறு காட்டப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 1980 இன் 47 ஆம் இலக்க தெசிய சுற்றாடல் சட்டத்தின் 23(ஆ) பிரிவு | 2022 ஆண்டின் போது காலாவதியாகி இருந்த 22 சுற்றாடல் அனுமதிப் பத்திரங்களை புதுப்பித்தீருக்கவில்லை. | சுற்றாடல் அனுமதிப் பத்திரத்தை வழங்க தகைமையை பூர்த்தி செய்யாத அனுமதிப் பத்திரதாரர்களுக்கு அனுமதிப் பத்திரம் வழங்கப்படாததுடன் குறித்த கறைபாடுகளை நிவர்த்தி செய்து கொள்ளுமாறு கடிதம் மூலம் அறிவூட்டப்பட்டதாக. | அனுமதிபத்திரத்துடன் வியாபாரங்களை நடாத்திச் செல்வதற்காக ஒழுங்கு செய்ய வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 6,614,736 ஆக இருந்ததுடன் அதற்கு ரேரொத்ததாக முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 7,524,216 ஆக இருந்தது.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

சமர்ப்பிக்கப்ட்ட தகவல்கள் பிரகாரம்மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | வருமான மூலம் | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 681,900 | 165,000 | 165,000 | - | 411,900 | 674,000 | 524,200 | 149,800 |
| (ii) | வாடகை | 18,560,707 | 17,329,003 | 16,574,036 | 2,618,233 | 11,525,747 | 10,506,861 | 8,328,695 | 2,178,166 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,169,100 | 1,386,323 | 1,056,023 | 330,300 | 1,018,200 | 896,142 | 825,342 | 70,800 |
| (iv) | ஏனைய வருமானம் | 14,660,020 | 12,001,313 | 3,374,335 | 25,579,244 | 8,850,830 | 13,768,916 | 6,078,928 | 16,952,267 |
| | | 35,071,727 | 30,881,639 | 21,169,394 | 28,527,777 | 21,806,677 | 25,845,919 | 15,757,165 | 19,351,033 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வாடகை** | | |
| (i) | மீளாய்வாண்டு திசெம்ப்ர் 31 திகதியன்று ஆண்டு 09 இற்கும் 11 இற்கும் இடையிலான காலமாக நிலுவையாக காணப்படும் ரூபா 1,350,308 ஆன பசுமாடடிறைச்சி கடை வாடகையை தீர்ப்பனவு செய்வது தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2023.02.21 திகதிய பொது சபையின் ஊ 03 xi சபை தீர்மானம் ஊடாக நிலுவையை பதிவழிக்க தீர்மானித்துள்ளதுடன் அதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக. | தீதித்துக் கொள்ள வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டு திசெம்ப்ர் 31 திகதியன்று ஆண்டு 08 இற்கும் 10 இற்கும் இடையிலான காலமாக நிலுவையாக காணப்படும் கோழி இறைச்சிக்கடை வாடகை ரூபா 456,134 ஆனது. | 2023.02.21 திகதிய பொதசபையின் ஊ 03 xi சபை தீர்மானம் ஊடாக நிலுவையை பதிவழிக்க தீர்மானித்துள்ளதுடன் அதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக. | -மேற்படி- |
| **(ஆ)** | **அனுமதிப்பத்திரக் கட்டணம்** | | |
| | மீளாய்வாண்டு திசெம்ப்ர் 31 திகதியன்று வியாபார அனுமதிப்பத்திரம் கைத்தொழில் அனுமதிப்பத்திரம் மற்றும் தொழில்சார் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளாது வியாபாரங்களை நடாத்திச் சென்ற நிறுவனங்களின் எண்ணிக்கை 341 ஆனது. | பதில் வழங்கப்படவில்லை. | -மேற்படி- |
| **(இ)** | **ஏனைய வருமானம்** | | |
| | மாகாண சபை பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று | நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணத்தை அறவிட | வருமானத்தை அழைப்பித்துக் கொள்ள |

| | | |
|---|---|---|
| பெற வேண்டியதாக இருந்த நீதிமன்ற தண்டப்பண வருமானம் ரூபா 18,558,237 தொகை மற்றும் முத்திரை கட்டண வருமானம் ரூபா 6,528,240 ஆனது. | கோரிக்கை செய்துள்ளதாக. | வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கிரயம் ரூபா 2,390,568 செலவில் நிர்மாணிக்கப்பட்ட தல்பொத்த புதிய பேரூந்து தரிப்பிடத்திற்கு பேரூந்துகளை உட்செலுத்தாததால் 06 ஆண்டு காலமாக விளைவற்று காணப்பட்டது. | எதிர்காலத்தில் சொத்துக்களை பொருத்தமான நடவடிக்கைகளில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுப்பதென. | காணப்படும் சொத்துக்களை பொது மக்கள் நலனுக்காக பயன்படுத்த வேண்டும். |
| (ஆ) | பெறுமதி ரூபா 95,912 ஆன குபோட்டா கைடெக்டர் 05 ஆண்டு காலமாக விளைவற்று காணப்பட்டன. | 2022 ஆண்டிற்காக மேற்கொள்ளப்படும் பண்டக கணிப்பீட்டு சபையின் பரிந்துரையின் மீது அகற்ற தேவையான நடவடிக்கை எடுப்பதென. | சொத்துக்களை பயன்படுத்துவது இல்லையெனில் பராதீனத்திற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சிடம் இருந்து கிடைத்திருந்த பெறுமதி ரூபா 1,560,000 ஆன 06 நடமாடும் வியாபாரக் கூடங்களில் 05 இனை குறித்த வியாபாரக் கூடங்களை பெற்றுக் கொண்ட நபர்களால் அவற்றை பயன்படுத்தாத காரணத்தால் விளைவற்று காணப்பட்டதுடன், வியாபாரக் கூடமொன்றை பெற்றுக் கொண்ட நபரொருவரினால் குறித்த வியாபாரக் கூடத்தை சபையுடன் உடன்பட்ட ஒப்பந்தத்திற்கு முரணாக அதிகார எல்லையின் வெளி நபர் ஒருவருக்கு வழங்கியிருந்தார். | கணக்காய்வு பரிசோதனையின் போது கிடைத்த தகவல்களின் படி குறித்த நடமாடும் வியாபாரக் கூடத்தை சபையுடன் உடன்பட்ட ஒப்பந்தத்தை மீறியதால் சபையிற்கு சுவீகரித்துள்ளதென. | கிடைத்துள்ள சொத்துக்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சின் திண்மக் கழிவு அலகின் மூலம் 2019 ஆண்டில் தாபித்திருந்த கௌசிமா இயந்திரத்தினால் ஒரு தினத்தில் உற்பத்தி செய்ய முடியுமான சேதனப் பசளை கொள்ளவு 50 டொன்கள் ஆன போதும், அதிகார எல்லையில் அந்த அளவான கொள்ளளவு சேராததால் ஏனைய சபைகளின் உக்கலடையும் கழிவுகளை கொண்டுவரும் அதிக கிரயம் காரணமாக ஒன்றுசேறும் கழிவுகள் குறைவடைந்ததன் மீது | கௌசிமா கருத்திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட முதலீடு விளைவற்ற ஒன்றானமையால் ஆலோனை கோரி கடிதம் மூலம் அறிவித்துள்ளதென. | சாத்தியப்பாட்டு ஆய்வொன்றின் பின்னர் பொருத்தமான கருத்திட்டத்தை மாத்திரம் தாபிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| கொள்ளளவின் 2 சதவீதத்தை மாத்திரம் பயன்படுத்த முடியுமாக இருந்ததால் பராமரிப்பு கிரயம் காரணமாக இயந்திரத்திற்காக செலவிட்டுள்ள ரூபா 145 மில்லினான மூதலீடு விளைவற்றதாக ஆகியிருந்தது. | | |

**3.2 மனிதவள முகாமைத்துவம்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| பிரதேச சபையின் அங்கீகார அபிவிருத்தி உத்தியோகத்தர் 05 பதவிகளில் 04 உம், நூலக அதிபர் 03 பதவிகளில் 02 உம், வெற்றிடமாக காணப்படுவதுடன், சுகாதார தொழிலாளர் 01 வெற்றிடத்திற்காக அமைய ஊழயிர்கள் 08 பேர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | ஆளணி தேவைப்பாட்டை அறிக்கையிட்டுள்ளதாக. | வெற்றிடம் மற்றும் மிகை தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |